முருகப்பெருமான் துணை

# மகான் திருவள்ளுவர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.09.2021, வெள்ளிக்கிழமை

1. அன்னதான மகா சக்தியே அரங்கா
அன்பர்கள் உள்ளத்தே கலந்து
எண்ணசித்தி அருளும் தேசிகா
ஏழாம்படைவீட்டு ஞானியே உமை போற்றி
2. போற்றியே துல்லிய ஆசிதனை
புகலுவேன் பிலவ தரிவை திங்கள்
ஆற்றல்பட அட்டம திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 8ம் நாள், 24.09.2021, வெள்ளிக்கிழமை)
அருளுவேன் திருவள்ளுவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி மக்கள் வர
ஞானமாக சன்மார்க்கம் அருளும்
ஞானவழிகளை உலகோர் பின்பற்ற
4. பின்பற்ற மக்களிடை ஆக்கம்
பிரணவ சக்தியாக மாறும்
பின்பற்ற மக்களுள் தேற்றம்
பிரபஞ்ச மகா சக்தியாகக் கூடும்
5. கூடவே ஞானவான்கள் எனும்
கூட்டம் உலகமெங்கிலும் பரவி
திடமுற எங்கும் எதிலும்
தெய்வபலம் பெருகி வரும்
6. வருகவே சாமானியர் தனக்கும்
வளர்ச்சி மாற்றம் தேற்றம் கூடி
தரும சிந்தை தானாக வளரும்
தவராசனின் ஆசி தீட்சை அடைய
7. அடையவே ஞானிகள் தயவும்
ஆறுமுகனார் அருள் பலமும்
தடையற மக்களுக்குக் கிட்டி
தரணியில் ஞான ஆட்சி மலரும்
8. மலருகின்ற சமூக மாற்றத்துக்கும்
மகேசனாக அரங்கன் துணை
வளர உலகம் பாதுகாப்புறும்
வளர்ச்சிப் பாதை நோக்கி மாறும்

9. மாறுதலை செய்தே தீருவேனென
மக்களை நோக்கி அருளி
ஆறுதல் தருகின்ற அரங்கன்
அன்னதான தீட்சை பலனும்

10. பலனும் மக்களை மாற்றி
பரிபக்குவமுள்ள சான்றோர்களாக்கும்
வளமும் மனபலமும் உள்ள
வள்ளல் தன்மை கொண்ட மக்களை

11. மக்களை படைத்து அரங்கனருளும்
மார்க்கமே ஞான ஆட்சிதரும்
ஆக்கம் தரும் அரங்கமகானின்
ஆற்றலே உலகை வெல்லும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–